உ

கணபதி துணை

6745
(8404)

கும்பகோணம்

கூத்தாடுங் கணபதி பதிகம்.

இஃது

திருவெவ்வுளூர்

இராமசாமிசெட்டியாரவர்களால்

இயற்றப்பட்டு,

கும்பகோணம்

ஜவுளிவியாபாரம்

தி. பா. சிவானந்தசெட்டி

கம்பெனியாரவர்களால்,

சென்னை

இந்து யூனியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

துன்முகி வருஷம் கார்த்திகை மீ.

கூத்தாடுங்கணபதி.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90 (?)
TIRUVANMIYUR, MADRAS-41.

குமரகோனார்

உத்தரகோசமங்கைப் பதிகம்.

காப்பு—நேரிசைவெண்பா.

சந்தவரு மெத்துங் குடைகைக்கு மேசாகனி
பற்றிடவு மென்னா விதியுறை—உத்தரகோசமங்கைச்சே
ர்ந்த ம் உத்தரமே வாரணமென் னாமலென
ளருக்க தாட வுறும்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புவுரு மதிச்செஞ் சடைலமுங் கருணை
பொழிகணும் யானைமா முகமுந்
தெவரும் வியக்கு மங்குச பாசந்
திகழ்கரங் களுமணி வயிறு

மாவளந் தருபொற் பாதமு மெளியேன்
வாழ்த்துற வந்தருள் புரிவாய்
காவளர் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (க)

சீதள சந்த்ர சடாதரி சுபுத்ர
சிந்துரா னனமகா தீர
பூதரா யகலம் பேதர விசால
புயாசல புங்கவ புராண
மாதவ சிரேஷ்ட முரகரி மருக
வரமருள் மாமலர் மணமோர்
காதமார் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (உ)

அவிர்மணி முடிநேர் திதலைகொ ணகில
மார்சசிக் கிசைந்தவச் சிரன்றன்
றவமதற் கிரங்கி நந்தனம் பெருகத்
தகுமுனி காரகமுன் கவிழ்த்து

நவமுறக் காத்த கயமுனிக் கன்றே
நலமருள் சென்னிநா டதனிற்
கவிஞர்சொல் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (௩)

பண்ணினு மினிய மொழியினார் கலவி
பாலிக்கு முந்தியென் றுளத்தி
லெண்ணிவா ணாளை வீணினிற் கழித்தே
யெய்த்தன னென்செய்வே னந்தோ
புண்ணியர் பரவும் வண்ணமா மணியே
புனன்மிகு காவிரி நதிசூழ்
கண்ணியக் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (௪)

நனையவிழ் மலர்ப்போ தெடுத்தொரு நாளு
நளினநேர் நின்றுணைத் தாளிற்
புனைகிலேன் வாரம் பூண்டிலேன் மதியாப்
புன்மையேன் றன்னையாண் டருள்வா

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

யினிமைகொண் மாமாங் கனியான் றாமு
னேற்றவா மாடமா ளிகைமேற்
கனமுலாங் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (௫)

தந்தையெவ் வழியோ வவ்வழிப் புதல்வர்
தாமெனு முலகியற் கேற்ப
விந்தைசே ரரன்கூத் தெனவிழைந் தாடன்
மேவினை யதுதகுந் தகுமே
பந்தினை நிகர்க்குங் கொங்கைவல் லபையின்
பாகனே மாகர்ந டளவுங்
கந்தமார் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (௬)

சொல்விரும் பாத மூடர்க ளுறவுந்
தோகையர் மோகமாந் துகளும்
பல்விதத் துன்பு முடனுறு பிணியும்
பாறவே வந்தருள் புரிவாய்
நல்விசும் புள்ளார் தொழுஞ்சிகா மணியே
நவிலரும் பவளமால் வரையே

கல்வியார் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (எ)

வயங்குமுத் தலைவேல் சக்கரந் தண்டம்
வச்சிரப் படையினைத் தாங்கி
யியங்குமத் தேவர் நின்பத மலரை
யிறைஞ்சியெண் ணியவித மாங்கே
நயங்கொளப் பெற்று ரென்னிலுன் மகிமை
நானிலத் துரைக்கவல் லவரார்
கயங்கள்சூழ் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (அ)

சித்திபுத் திப்பேர் மாதரைத் தந்த
திசைமுகன் வசிப்பது தெரிந்தோ
சுத்தமார் கங்கை மகாமகத் தன்று
சேர்ந்திடா தணுகுதல் குறித்தோ
வித்தல மேலென் றுணர்ந்துள மகிழ்ந்தோ
விசைந்துகூத் தாடுவ துரையாய்
கத்தனார் குடந்தை வதிந்துகூத் தாடுங்
கணபதி யெனுங்குண நிதியே. (கூ)

கரும்புகைக் குழலாள் வல்லை மனை
காத்தரு ளெனநீ நன்மா
கரும்புகழ்ந் தோது மிறைவபா வினீர்
கடலைமோ தகமவல் மிகது
கரும்புழைக் கைம்மா தங்கவத் திரளிக்
கடையனேன் றனக்கரு ளநிசெய்த்
கரும்புநாட் குடக்கை வதிந்துகடத் தாயே
கணபதி யெனுங்குண நிதியே (கo)

கணபதி யென்று னன்புடன் ஆடியோர்
கம்பிணி நீக்கியான் டருளுங்
கணபதி சித்திக் கணபதி சீரும்
கல்வியுஞ் செல்வமுந் தருமெய்த்
கணபதி திவ்ய கருணைகாட் டருளச்செய்
கணபதி சரக்கணம் வணங்குங்
கணபதி குடக்கை வதிந்துகடத் தாயே
கணபதி யெனுங்குண நிதியே (கக)

முற்றிற்று.